[12th March 1964

புது விடுதிக்கான கட்டடங்கள் கட்டுகிறபோது பெற்றோர்களிட மிருந்து நன்கொடை வாங்கினல் அதை லஞ்சம் கொடுத்ததாக எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஹரிஜன சேவா சங்கங்களால் நடத் தப்படும் பல உணவு விடுதிகள் சரிவர நடத்தப்படவில்லை என்ற காரணத்தினல் அரசாங்கத்திற்கு மனுக்கள் அனுப்பப்பட்டும் சர்க்காரே எடுத்துக்கொள்ள முன்வந்தும், அதற்குப் பிறகு அவர்கள் விடமாட்டோம் என்று பிடிவாதமாகச் சொல்கிருர்களே, அதற்குக் காரணம் என்ன? சேவைசெய்ய வேண்டும் என்கிற காரணமா? அல்லது அதில் வருகின்ற வருவாய் காரணமா?

கனம் திரு. பூ. கக்கன் : அது அவரவர்கள் இஷ்டம். அரசாங் கத்தைப் பொறுத்தவரையில் ஹாஸ்டல் நன்ருக நடக்க வேண்டும்.

கனம் சபாநாயகர் : இதெல்லாம் அவரவருக்குத்தான் தெரிய வேண்டும். அமைச்சர் அவர்கள் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

Village officers

* 233 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the assaulting of village headman by the tax-payers during the time of discharge of their duties in the capacity as Government servants are on the increase day by day; and

(*b*) if so, the action taken to prevent and safeguard them from such unhappy incidents?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) It is not correct to say that assaults of Village Officers by tax-payers during the time of discharge of their official duties are on the increase. There have been only a few such cases.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரி கேஸ்கள் நடந்த தைக் குறித்துப் பல முறை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அதற்காக என்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போல ஒருசில இடங்களில் இந்தக் கஷ்டம் ஏற்பட்டது. அதுபோன்ற நிலைமை ஏற்படும்போது அரசாங்கம் என்ன என்ன பாதுகாப்பை அவர்களுக்குக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

12th March 1964]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கும்படியான சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படுமா ? அரசாங்கமே கேஸ்களை எடுத்து நடத்த முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனியாகக் கேள்வி போடலாம்.

கனம் சபாநாயகர் : அரசாங்க ஊழியர்களுக்கு என்ன சலுகை இருக்கிறது ?

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அரசாங்கமே கேஸ் எடுத்து நடத்துகிறார்கள்.

கனம் சபாநாயகர் : இப்போதும் போலீசுக்குத் தகவல் கொடுத்தால் போலீஸ் சார்ஜ் ஷீட் போடுவார்களே.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அப்படியானால், இவர்கள் தனிப்பட்ட ஹோதாவில் நடத்த வேண்டும்.

MR. SPEAKER : He is also a public servant.

SRI R. S. VEERAPPA CHETTIAR : But the village officer is not treated as a public servant.

MR. SPEAKER : Is he not a public servant according to the Indian Penal Code?

SRI R. S. VEERAPPA CHETTIAR : I do not think so. He is not treated like that.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளை 'பப்ளிக் சர்வன்ட்ஸ்' என்று அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா ? அப்படி இருந்தால், பப்ளிக் சர்வன்ட்டுக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளை கிராம அதிகாரிகளுக்குச் செய்து வருகிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்தின் வேலையைச் செய்கிறவர்களுக்கு இதுபோன்று எந்தவிதமான எதிர்ப்பு ஏற்பட்டாலும் அதைத் தடுப்பதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அரசாங்கம் செய்யும்.

திரு. ஆர். ரங்கசாமி : சில கிராம முன்சீப்புகள், கிராமத்திலே அவர்களுக்கு ஆகாத விவசாயிகள் இருந்தால், அவர்கள் மீது பொய்க் கேஸ்கள் போட்டுத் தவறாக நடக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் அப்படிப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, வேறு கிராம முன்சீப்புகளை நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : கிராம அதிகாரிகளின் விவசாயிகளிடம் தவறான முறையில் ஏதேனும் நடக்கும் பட்சத்தில், அவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க அரசாங்கம் தயங்காது.